# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2005, பெப்புருவரி மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

[2005 பெப்புருவரி மாதம் 22 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச.வ. —ஓ. 29/2004
4728

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்து வதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 544 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப் படுகின்றது :— 101 ஆம் அத்தியாயத்தின் 544 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "அசைவுள்ள ஆதனத்தை வைத்திருக்கும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அசைவுள்ள ஆதனத்தை வைத்திருக்கும்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஊ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்படும் ஒரு கம்பெனியினால் அல்லது வேறு ஆட்கள் குழுவினால் வழங்கப்படும் (காவியின் சாதனமொன்றாக அல்லது கைமாற்றத் தகு சாதனமொன்றாக இராத) ஏதேனும் பண வகையான அக்கறை தொடர்பான ஏதேனும் சாதனத்தை வைத்திருக்கும்,";

(3) அப்பந்தியின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

“இவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக —

“சாதனம் ” என்பது, பணக்கொடுப்பனவுக்கான ஒப்பந்த முறையிலான உரிமையொன்றை வெளிப்படுத்துகின்ற சட்டப்படியாக வலுவுறுத்தப்படற்பாலதான உடன்படிக்கையொன்று என்று பொருளாகும் ;

“காவியின் சாதனம்” என்பது, குறித்தசில நிபந்தனைகள் இணங்கியொழுகப்படுவதன் மேல், ஓராளிடமிருந்து இன்னோராளுக்குக் கைமாற்றப்படத்தகு சாதனமொன்று என்று பொருளாகும்.”

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*